# ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-06.

## பத்திக்கை செய்தி

2017-2018 ஆம் ஆண்டிற்கான அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான 1060 விரிவுரையாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் பணித்தெரிவு சார்ந்து ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை எண்.14/2019, நாள். 27.11.2019 வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கணினி வழித் தேர்வுகள் (CBT) 08.12.2021 முதல் 13.12.2021 வரை நடத்தப்பட்டு, தேர்வர்களின் மதிப்பெண்கள் 08.03.2022 அன்று ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

11.03.2022 நாளிட்ட ஆசிரியர் தேர்வு வாரிய பத்திரிக்கை செய்தியில், பணிநாடுநர்கள் தங்களது கல்வித் தகுதி மற்றும் பணி அனுபவம் தொடர்பான கூடுதல் சான்றிதழ்களை / ஆவணங்களை ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளம் வழியாக 11.03.2022 முதல் 01.04.2022 வரை பதிவேற்றம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.

கூடுதல் சான்றிதழ்களை / ஆவணங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பாக பல்வேறு பணிநாடுநர்களிடமிருந்து 11.03.2022 முதல் 01.04.2022 வரை 17,383 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன. அவ்வாறு வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் கீழ்க்காணும் 8 தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டன.

| வ.எண். | கோரிக்கை மனுக்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Login / Password | 2520 |
| 2. | Character and Conduct | 1390 |
| 3. | Work Experience Certificate | 3591 |
| 4. | Equivalence Subject | 7669 |
| 5. | Educational Qualifications and Additional Educational Qualifications | 1349 |
| 6. | Key Challenge | 120 |
| 7. | Petition without clarity | 114 |
| 8. | Others | 630 |
| Total | | 17,383 |

மேற்கண்ட கோரிக்கை மனுக்களின் விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் குழுக் கூட்டத்தில் விவாதித்து எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் கோரிக்கை மனுக்களுக்குறிய பதில்கள் கீழ்க்காணுமாறு அளிக்கப்படுகிறது.

1. **User Id மற்றும்** Login Password தொடர்பாக பெறப்பட்ட 2520 கோரிக்கைகளுக்கு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவ்விவரம் சார்ந்த பணிநாடுநர்களுக்கு மின்னஞ்சல் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது.

2. நன்னடத்தை (Character and Conduct) சான்றிதழ் தொடர்பாக 1,390 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன. அவற்றில் Conduct Certificate from Head of the Institution (Last studied) தொடர்பான கோரிக்கைகளுக்கு பணிநாடுநர் இறுதியாகப் பயின்ற கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) / பிற சான்றிதழில் நன்னடத்தை (Character and Conduct) குறிப்பிடப்பட்டிருந்தால் அச்சான்றிதழை பதிவேற்றம் செய்யலாம் எனவும், மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) / பிற சான்றிதழில் நன்னடத்தை (Character and Conduct) குறிப்பிடப்படாத நிலையில் பணிநாடுநர் இறுதியாகப் பயின்ற கல்வி நிறுவனத்திடமிருந்து நன்னடத்தை (Character and Conduct) சான்றிதழைப் பெற்று பதிவேற்றம் செய்ய வேண்டும் என சார்ந்த பணிநாடுநர்களுக்கு மின்னஞ்சல் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது. (நன்னடத்தை (Character and Conduct) தொடர்பாக பெறப்பட்ட பிற கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.)

3. பணி அனுபவச் சான்றிதழ் (Work Experience Certificate) பெறுவது தொடர்பாக 3591 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன. அவற்றில் பணி அனுபவச் சான்றிதழில் மேலொப்பம் பெறுவது (Counter sign), பணி அனுபவம் பகுதியொத்திருத்தல் (Experience Overlapping), செயல்படாமல் இருக்கும் கல்லூரிகள் / கல்வி நிறுவனங்களில் பணி அனுபவச் சான்று பெறுதல் (Working Colleges /Institutions closed) மற்றும் அறிவிக்கை தேதிக்கு முன்னர் பெறப்பட்ட பணி அனுபவச் சான்றிதழ் தொடர்பான கோரிக்கைகள் சார்ந்து ஆசிரியர் தேர்வு வாரியத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை ஏதுமில்லை என்பதால் அதுபோன்ற கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. விண்ணப்பத்தில் பணி அனுபவத்தை தவறுதலாகப் பதிவேற்றம் செய்துவிட்டு திருத்தம் கோரிய 1444 கோரிக்கைகள், வெளி மாநிலங்களில் பெற்றுள்ள பணி அனுபவம் (Work Experience from Other States) தொடர்பான 65 கோரிக்கைகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பெற்றுள்ள பணி அனுபவம் (Work Experience from Arts and Science Colleges) தொடர்பான 235 கோரிக்கைகள் மற்றும் பணி அனுபவம் குறித்த தெளிவுரைகள் (Clarifications related to Experience) தொடர்பான 816 கோரிக்கைகள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் ஏற்கப்பட்டுள்ளன. அதன்படி 2560 பணிநாடுநர்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பதாரர்களால் அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்கப்படும்.

4. இணையானக் கல்வித் தகுதி (Equivalence Subject) தொடர்பாக 7669 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன. பணிநாடுநர்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பதாரர்களால் அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்கப்படும்.

5. கல்வித் தகுதிகள் மற்றும் கூடுதல் கல்வித் தகுதிகள் (Educational Qualifications and Additional Educational Qualifications) தொடர்பாக 1349 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன. அக்கோரிக்கை மனுக்கள் சார்ந்து ஆசிரியர் தேர்வு வாரியத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை ஏதுமில்லை என்பதால் அக்கோரிக்கை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

6. 120 பணிநாடுநர்கள் தற்காலிக விடைக்குறிப்புகள் தொடர்பாக தங்களது ஆட்சேபனைகளை (Key Challenge) தெரிவித்துள்ளனர். பணிநாடுநர்கள் தற்காலிக விடைக்குறிப்புகள் மீதான ஆட்சேபனைகளை (Key Challenge) தெரிவிக்க ஏற்கனவே வாய்ப்புகள் வழங்கப்பட்டதால் அக்கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

7. 114 பணிநாடுநர்களிடமிருந்து தெளிவற்ற கோரிக்கைகளுடன் மனுக்கள் (Petitions without clear requests) வரப்பட்டன. பணிநாடுநர்கள் தங்களது கோரிக்கைகளை தெளிவாகக் குறிப்பிடாததால் அக்கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

8. மேற்கண்ட கோரிக்கைகள் சாராத இதர வகைகளில் (Others) 630 பணிநாடுநர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. அக்கோரிக்கைகள் சார்ந்து ஆசிரியர் தேர்வு வாரியத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை ஏதுமில்லை என்பதால் அக்கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

மேலும், கூடுதல் சான்றிதழ்கள்/ ஆவணங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பாக 11.03.2022 முதல் 01.04.2022 வரை பெறப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 01.04.2022 தேதிக்கு பின்னர் பெறப்பட்ட கோரிக்கைகள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் பரிசீலிக்க இயலாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் ஏற்கப்பட்ட கோரிக்கைகளுக்கு மட்டும், கோரிக்கைகள் பெறப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு கூடுதல் சான்றிதழ்களை / ஆவணங்களை பதிவேற்றம் செய்யும் வகையில் 19.05.2022 தேதிக்கு பிறகு link அனுப்பிட திட்டமிடப்பட்டுள்ளது. அதில் பணிநாடுநர்கள் தங்களது கூடுதல் சான்றிதழ்களை / ஆவணங்களை 20.05.2022 முதல் 31.05.2022 வரை பதிவேற்றம் செய்யும் வகையில் தற்போது

திட்டமிடப்பட்டுள்ளது. இத்தேதியில் மாற்றம் ஏதும் இருப்பின் மீண்டும் செய்திக் குறிப்பின் மூலமாகவும் வலைதளத்தின் மூலமாகவும் தெரிவிக்கப்படும்.

சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் இரு கட்டங்களாக நடைபெறும். முதற்கட்ட சரிபார்ப்பில் ஆவணங்களுடன் பணிநாடுநர்கள் தெரிவித்துள்ள விவரங்களுடன் சரிபார்க்கப்பட்டு அறிவிக்கையின்படி தெரிவானவர்கள், நிராகரிக்கப்பட்டவர்களின் பட்டியல் வலைதளத்தில் ஜூன் மாதத்தில் வெளியிட தற்காலிகமாக திட்டமிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேல்முறையீடுகள் முடிவு செய்த உடன் 2ம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு பணிநாடுநர்கள் முன்னிலையில் அசல் சான்றிதழ்களுடன் நடத்தப்பட்டு ஜூன் மாத இறுதி அல்லது ஜூலை மாத முதல் வாரத்தில் தற்காலிக தெரிவர்களின் பட்டியல் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து விவரங்களும் வெளிப்படையாக வலைதளத்தின் மூலமாகவும், செய்திக் குறிப்பின் வாயலாகவும் தெரிவிக்கப்படும். தெரிவு நடைமுறைகள் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்படும் என்று அனைத்து பணிநாடுநர்களுக்கும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இத்தெரிவிற்கு நேர்முகத் தேர்வு இல்லை என்பதும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகின்றது.

**நாள்**: 16.05.2022. **தலைவர்**